**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

---

IN THE COURT OF I ADDITIONAL SESSIONS JUDGE, CHENNAI.

**Case No. : SC. 361/2019** **Date: 08.07.2025**

Deposition of Witness for Prosecution LW-/PW-1

Name : திரு. ஸ்ரீதர்

Father's Name :

Village :

Taluk : Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 8th day of July 2025.

---

**<u>எதிரிகள் ஆஜர்</u>**

**<u>1, 2 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:–</u>**

நான் ஸ்மார்ட்சேப்ஸ் சர்வீஸ் கம்பெனியில் பணிபுரிந்து வந்தேன் என்பதற்கு போலீசார் விசாரணையில் ஆவணங்களை கொடுத்தேனா என்றால் இல்லை. புகாரை நான் கைப்பட எழுதினேன். புகாரில் தமிழ்செல்வன் என்னை எத்தனை மணிக்கு தொடர்பு கொண்டார் என்பதை குறிப்பிடவில்லை என்றால் சரிதான். சம்பவத்தில் எத்தனை நபர்கள் ஈடுபட்டனர் என்று நான் புகாரில் குறிப்பிடவில்லை. புகாரில் எந்த எந்த கிளைகள் விவரம் குறிப்பிடவில்லை. எவ்வளவு ரூபாய் வசூல் செய்து ஆ.சா.2 வைத்திருந்தார் என்று குறிப்பிடவில்லை. சுமார் ரூ.5 லட்சம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. பணத்தை கிளையில் இருந்து பெற்றுக்கொண்டதற்கு ரசீது கிளைவசம் வழங்கப்படும் என்றால் சரிதான். என்னென்ன விகிதத்தில் பணம் பெறப்பட்டது என்ற விவரம் கிளையில் பதிவு செய்யப்படும். புகார் கொடுத்த அன்றே பணம் கிடைத்த விவரத்தை

போலீசார் என்னிடம் கூறினார்களா என்றால் சரியாக எனக்கு நினைவில்லை. நானும் அ.சா.2–ம் நான் சொன்னபடி நிறுவனத்தில் வேலை பார்க்கவில்லை என்றும் புகாரில் கூறியுள்ளபடி சம்பவம் எதுவும் நடக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. புகாரை நான் மாலை 5.00 மணிக்கு கொத்தேனா என்றால் அ.சா.2 கூறியவுடன் சுமார் 11.00 மணிக்கு கொடுத்தேன். போலீசார் சொல்லி கொடுத்த விவரத்தை புகாரில் எழுதினேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை**:– இல்லை.

Taken down by me/before me in open Court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct.

Date : 08.07.2025

I Additional Judge

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

IN THE COURT OF I ADDITIONAL SESSIONS JUDGE, CHENNAI.

**Case No. : SC. 361/2019** **Date: 08.07.2025**

Deposition of Witness for Prosecution LW-/PW-2

Name : திரு. தமிழ்செல்வன்

Father's Name :

Village :

Taluk : Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 8th day of July 2025.

**<u>எதிரிகள் ஆஜர்</u>**

**<u>1, 2 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:–</u>**

ஸ்மார்ட்சேப்ஸ் சர்வீஸ் கம்பெனியில் பணிபுரிந்தேன் என்பதற்காக விவரத்தை போலீசார் விசாரணையில் என்னிடம் வாங்கினார்களா என்றால் இல்லை. போலீசார் விசாரித்தபோது யமஹா வாகனத்தில் எதிரிகள் வந்ததாக கூறியுள்ளதாக ஞாபகம் உள்ளது. போலீசார் விசாரணையில் எந்த எந்த கிளைகளில் இருந்து பணம் வாங்கினேன் என்று சொல்லியுள்ளேன். போலீசார் விசாரணையில் எந்த எந்த கிளையில் எவ்வளவு பணம் வாங்கினேன் என்று சொன்னேனா என்றால் சொல்லவில்லை சலானில் அந்த விவரம் உள்ளது. யமஹாவில் வந்த நபர்களை காவல் நிலையத்தில் காட்டினார்களா என்றால் இல்லை. சம்பவத்திற்கு பிறகு அந்த நபர்களை நான் பார்த்தது இல்லை. நான் சொன்ன நிறுவனத்தில் வேலை பார்க்கவில்லை என்றும் போலீசார் சொல்லிக்கொடுத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u>:–** இல்லை.

| |
|---|
| Taken down by me/before me in open Court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct.<br>Date : 08.07.2025<br><br>I Additional Judge |